Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 321/2025** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **பவுன்தாய்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**13.07.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது கல்லூரணியில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்து போன ஞானபிரகாசம் எனது மகன் ஆவார். கடந்த 06.09.2024ம் தேதி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செல்வதாக என்னிடம் எனது மகன் கூறிவிட்டு காலை சுமார் 09.00 மணியளவில் எனது வீட்டில் இருந்து எனது மகன் இருசக்கர வாகனத்தில் கிளம்பினார். அன்று காலை சுமார் 10.00 மணியளவில் எனது வீட்டிற்கு அருகில் உள்ள ராஜ்குமார் எனக்கு போன் செய்து எனது மகன் கட்டங்குடி சாலை அருகே சென்று கொண்டிருந்தபோது எனது மகன் இருசக்கர வாகனத்திற்கு பின்னால் வந்த ஒரு கார் எனது மகன் இருசக்கர வாகனம் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் கூறினார்.

2. நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்குள் எனது மகனை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டார்கள். நான் எனது மகனை மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது மகன் உயிருடன் இல்லை, தலை, மற்றும் கை, கால்களில் பலத்த காயம் இருந்தது. சம்பவத்தன்று காலை சுமார் 11.30

மணியளவில் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்திற்கு சென்று நான் சொல்ல சொல்ல எனது மகள் ஞானமணி புகாரை எழுதி கொடுத்தார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. **(புகார்மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**